# Gospel Truth
# காஸ்பெல் ட்ரூத்

உலகளாவிய திருச்சபைகளை ஊக்குவிப்பதற்கான வேதாகம விளக்கங்கள்

ISSUE - 36 International Editor : MICHAEL W.SMITH இதழ் - 36


## தேவன் நமக்கு அடைக்கலம்

தேவன் நமக்கு அடைக்கலமும் பெலனும், ஆபத்துக்காலத்தில் அநுகூலமான துணையுமானவர் – சங்கீதம் 46 : 1

ஏன் ஒரு அடைக்கலம் உள்ளது ? தேவனுடைய பிள்ளைகளாகிய நாம் கிறிஸ்துவின் மூலமாக பெற்ற இரட்சிப்பினால் தான் வாழ்வின் துயரம், பிரச்சனை, பாடுகளிலிருந்து விலக்கி காக்கப்படுகிறோமா?? பதில் என்னவென்றால் இல்லை. இரட்சிப்பு என்பது பாவம் சாபம் இவற்றினின்று விடுதலையாக்கப்பட்ட உயரிய அனுபவம்.

நித்திய ஜீவனைக் குறித்த நம்பிக்கையும், பரிசுத்த ஆவியானவர் தரும் உள்ளார்ந்த சமாதானம், சந்தோஷமும் அவராலே நமக்கு கிடைக்கும் பலன். உணர்வுகள் நிறைந்த பாடுள்ள மனுஷராய் இந்த பாவ உலகத்தில் நாம் சிருஷ்டிக்கப்பட்டுள்ளதால் நமக்கும் உலகத்தோடு போராட்டம் உண்டு. சில வேளை சூரியன் பிரகாசிக்கவில்லையோ என்று தோன்றும் அளவுக்கு உள்ளார்ந்த மற்றும் வெளிப்படையான துக்கங்கள் நம் ஆத்துமாவை ஒடுக்க நேரலாம். நம் இருதயம் அதிகமான பாரத்தால் துக்கப்படும் போது நமக்கு உண்மையாகவே ஒரு அடைக்கலம் தேவைப்படுகிறது.
நம் துயரங்களின் நடுவே ஆறுதல் தரும் தேவனுக்கு நன்றி செலுத்துகிறேன்.
சங்கீதம் 46 ல் கூறப்பட்டுள்ள ஒவ்வொரு வார்த்தையும் தேவனுடைய ஊழியக்காரருக்கும் , வேதனை பாடுகள் மத்தியில் வாழும் ஜனங்களுக்கும் பெலனாய் இருக்கிறது.அடைக்கலம் என்னும் வார்த்தை பாதுகாப்பு, நம்பிக்கையின் இடம், பாதுகாப்புக்காக தப்பி ஓடுகிற இடம் என்று பொருள்படும்.வாழ்க்கையிலே ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான பிரச்சனை உண்டு. அதில் இருந்து மீண்டு வரவும், ஆறுதல் கிடைக்கவும், உலகத்தின் பல காரியங்களை நோக்கி பயணித்துக் கொண்டு இருக்கிறார்கள். ஆனால் மெய்யான ஆறுதல் கர்த்தரிடத்தில் மாத்திரமே உண்டு. வாழ்வின் விரக்தியான சூழ்நிலையிலும் துயரத்திலும் நமக்கு அடைக்கலமானவர் தேவனாகிய கர்த்தர் ஒருவரே.
எல்லா வேதனையும் நீக்கி நமக்கு தேற்றர வாளனாயிருந்து பாதுகாப்பவர் அவர் மாத்திரமே. தேவனுடைய பரிசுத்தவான்கள் பலர் இருளான கசப்பான பல அனுபவங்கள், பாடுகளின் வழியே கடந்து வந்தவர்கள். சிலர் காரியங்களை மனதில் வைத்து மூடிவிட்டு எப்போதும் சிரித்த முகத்தோடு இருப்பார்கள். உள்ளத்தின் ஆழத்தில் விசாரங்கள் பெருகிக் கொண்டேதான் இருக்கும். ஓ தேவ பிள்ளையே ! காயம்பட்ட உன் இதயத்திற்கு ஆறுதல் உண்டு. வேதனை நிறைந்த உடைக்கப் பட்ட இதயத்தோடு என்னிடம் வாருங்கள். நான் உங்களை அன்பு காட்டி, அரவணைத்து, ஆறுதல் படுத்தி தேற்றுகிறவர் என்று கர்த்தர் சொல்கிறார். “ துயரத்தில் ஆறுதல் அவரே ” அவர் காலந் தாமதிக்க மாட்டார். துன்பம், கவலை, பயத்திலே உங்களுக்கு உதவி செய்வார்.

ஏசாயா தீர்க்கதரிசி கர்த்தருடைய பாதுகாப்பை இவ்விதமாக கூறுகிறார். நீர் ஏழைக்குப் பெலனும்,நெருக்கப்படுகிற எளியவனுக்குத் திடனும், பெருவெள்ளத்துக்குத் தப்பும் அடைக்கலமும், வெயிலுக்கு ஒதுங்கும் நிழலுமானீர் (ஏசாயா 25 : 4). ஆத்துமா துக்கத்தால் வாடும்போது இரட்சகராம் அவர் துணை.களைத்துப் போன பிள்ளையே நீ தனிமைப்பட்டவள் அல்ல. நீ இன்று போராடும் பிரச்சனைகளிலிருந்து உன்னை விடுவித்து தயை பாராட்ட அவர் ஆயத்தமாய் இருக்கிறார். ஏசாயா 43 : 1- 3 சொல்கிறது. இப்போதும் யாக்கோபே, உன்னைச் சிருஷ்டித்தவரும், இஸ்ரவேலே, உன்னை உருவாக்கினவருமாகிய கர்த்தர் சொல்லுகிறதாவது: பயப்படாதே; உன்னை



**களைத்துப் போன பிள்ளையை நீ தனிமைப்படுத் தப்பட்டவன் அல்ல நீ இன்று போராடும் பிரச்சனைகளிலிருந்து உன்னை விடுவித்து தயை பாராட்ட அவர் ஆயத்தமாய் இருக்கிறார்**


| | | | | |
|---|---|---|---|---|
| தலையங்கம் 3 | தேவனுடைய வாக்குத்தத்தங்கள் 4 - 5<br>விசுவாசத்தின் பரீட்சை 5 | சந்தேகத்தின் பார்வைக்கு இதயக்கதவை மூடுங்கள்<br>சூரியப்பிரகாசத்தை காணுதல்<br>பாடுகளின் மத்தியில் பாடுதல் 6 | தோல்வியின் முடிவில் வெற்றி<br>விசுவாசத்தை உணர்வுகளுக்கு மேலாக எண்ணுங்கள் 7 | உங்களுக்கு தெரியுமா?<br>ஏற்ற சமயத்தில் ஒரு வார்த்தை 8 |

# வேதாகமம்,




## நமக்கு போதிப்பது என்ன….. ?

**தேவனுடைய வார்த்தை**

2 தீமோ 3:16-17; 2 பேது 1:20-21;
மத் 24:35

**அன்பு**

மத் 22:37-40; யோவா 14:21-23,
1 யோவா 4:7-11

**மனந்திரும்புதல்:**

அப் 3:19; 17:30; 2 கொரி 7:10

**புதுசிருஷ்டி**

யோவா 3:3-7; 2 கொரி 5:17; ரோம 6:1-4,
எபே 2 :1, 5-6

**பாவத்திலிருந்து விடுதலை**

1 யோவா 5:18; மத் 1:21 ; யோவா 8: 11

**பரிசுத்த ஆவியால் நிரப்பப்படுதல்**

அப் 1:8; 15:8-9; 19:2

**பரிசுத்தம்:**

லூக் 1:73-75; எபி 12:14; 1 பேது 1:15-16;
தீத்து 2: 11-12; ரோம 6:22

**தேவனுடைய இராஜ்யம்**

லூக் 17:20-21; ரோம 14:17; யோவா 18:36.

**சபை-** அப் 2:47; எபே 4:4-6;
1 கொரி 12 :12-13; கொலோ 1:18

**ஒற்றுமை**

யோ 17 : 20-23; கலா 3:28;
வெளி 18:2-4

**நியமங்கள்**

மத் 28:19-20; 26:26-30;
1 கொரி 11 :23-27; யோவா 13:14-17

**தெய்வீக சுகமளிப்பு**

லூக் 4:18, ஏசா 53 :4,5, யாக் 5 :13-16

**விவாக முறைமை**

மத் 19:5-6; லூக் 16 :18; ரோம 7:2-3;
1 கொரி 7:10, 11

**வெளிப்புற தோற்றம்**

1 தீமோ 2:9-10; 1 கொரி 11 :14-15;
உபா 22 :5

**கடைசிகாலம்**

2 பேது 3 : 7-12 ; யோவா 5 :28 ,29;
2 கொரி 5 :10; மத் 25 :31-46

**தொழுதுகொள்ளுதல்**

யோவா 4: 23,24; எபே 5 :19;
2 கொரி 3 :17

**சுவிசேஷம் அறிவித்தல்**

மாற் 16:15

மீட்டுக்கொண்டேன்; உன்னைப் பேர்சொல்லி அழைத்தேன்; நீ என்னுடையவன். நீ தண்ணீர்களைக் கடக்கும்போது நான் உன்னோடு இருப்பேன்; நீ ஆறுகளைக் கடக்கும்போது அவைகள் உன்மேல் புரளுவதில்லை; நீ அக்கினியில் நடக்கும்போது வேகாதிருப்பாய்; அக்கினிஜுவாலை உன்பேரில் பற்றாது. நான் இஸ்ரவேலின் பரிசுத்தரும், உன் இரட்சகருமாயிருக்கிற உன் தேவனாகிய கர்த்தர்; வாக்குத்தத்த வசனத்தில் சொல்லப்பட்ட ஆறுகளும் அக்கினி ஜுவாலையோ இன்று இல்லை. ஆனால் அப்படிப்பட்ட பிரச்சனைகளோடு நீ போராடும் போது உன்னோடு இருப்பேன் என்கிறார்.

ஏனென்றால் கர்த்தரே நம்முடைய அடைக்கலமும் பெலனுமானவர். தாவீது கூறுகையில் நாம் பயப்பட வேண்டியதில்லை என்கிறார். ஆவிக்குரிய பொருளாதார ரீதியான பிரச்சினைகள் எதிர்கொள்ளும் போது நாம் பயப்படத் தேவையில்லை. தேவன் நம் பட்சத்தில் இருக்கிறார். சங்கீதம் 46 : 5 ல் அதிகாலையிலே தேவன் அதற்கு சகாயம் பண்ணுவார். அதாவது விடியற்காலையில் என்று அழகாக சொல்லப்பட்டு உள்ளது. இருளான இரவைக் கடந்து சூரியப்பிரகாசம் வரும் காலை பொழுதினை போன்று நம் துக்கத்தை சந்தோசமாக மாற்றுவார். நம்பிக்கையற்றவர்களுக்கு திடநம்பிக்கையும், சோர்ந்து போனவனுக்கு சத்துவத்தையும், உடைந்து போனவர்களுக்கு சுகத்தையும் கிறிஸ்து இயேசுவுக்குள் பெற்றுக் கொள்வீர்கள். இரவின் இருண்ட அந்தகாரம் நாம் காணும்போது முடிவில்லாதது போல இருந்தாலும் சூரிய ஒளிக்கதிர்கள் அதன் மீது படும்போது இருள் விலகி வெளிச்சம் நமக்கு பிரகாசிக்கும்.



**சோர்ந்துபோன உங்கள் ஆவியை இயேசுவின் கரத்தில் ஒப்புக் கொடுத்து அவரிடம் சாய்ந்து கொள்ளுங்கள் நீங்கள் உண்மையாக இருந்தால் தரமான பிரச்சனையை கடக்கும் போது அவர் உங்களை பிடித்து நடத்துவார்**

நீங்களும் பிரச்சனைகளோடு போராடிக் கொண்டிருப்பீர்களானால், சோர்ந்துபோன உங்கள் ஆவியை இயேசுவின் கரத்தில் ஒப்புக் கொடுத்து அவரிடம் சாய்ந்து கொள்ளுங்கள். நீங்கள் உங்களுக்கு முன்பதாக இருக்கும் வனாந்தரமான பிரச்சனையில் நடக்கும்போது அவர் உங்களை பிடித்து நடத்துவார். நீங்கள் கர்த்தரிடத்தில் காத்திருந்தால், வனாந்திரம் பாலைவனச் சோலையாகும்.இருள் வெளிச்சமாகும்.

உங்கள் மனது குழப்பத்தாலும், உங்கள் ஆவி வேதனையில் இருக்கும் போது நீங்கள் அமர்ந்திருந்து, நானே தேவன் என்று அறிந்து கொள்ளுங்கள் (சங்கீதம் 46 : 10) .கர்த்தரால் ஆகாத காரியம் ஒன்று உண்டோ? அவர் மேல் நம்பிக்கை வைத்தவர்களை அவர் கைவிடவே மாட்டார். செழிப்பான வாழ்வு என்பது கிறிஸ்தவ வாழ்வு . ஆனால் போராட்டமான உலகத்தின் உள்ளார்ந்த மற்றும் வெளிப்புற துயரத்தை நீக்காது. நற்செய்தி என்னவெனில் உங்களை விடுவித்து அடைக்கலம் தர ஒருவர் உண்டு. நாம் பெற்ற சமாதானம் ஆ அது என்னே பாக்கியம்; ஓ என்ன தேவையற்ற வலிகளை எல்லாம் நாம் சுமக்கிறோம். தேவனுடைய பாதத்தில் ஜெபத்தில் வைத்துவிட்டால் நாம் சுமக்க வேண்டியதில்லை.


எங்களுடைய இதழை ஆன்லைனில் படிக்க
www.churchofgodeveninglight.org
நம்பிக்கை கதிர்கள்
பாடும் இதயத்தின் இரகசியம்
இதயப் பேச்சு

*கர்த்தரின் சத்தியத்தை உலகமெங்குமுள்ள சகல சிருஷ்டிகளுக்கும் பிரசங்கித்து, ஊக்கப்படுத்தி, உற்சாகப்படுத்துவதுதான் இந்த இதழின் முக்கிய நோக்கம். எங்களுடைய இதழை ஆன்லைனில் படிக்க* **www.thegospeltruth.org** *என்ற இணையதள முகவரியை பார்க்கவும். உங்களது கிறிஸ்தவ நண்பர்கள் மற்றும் தெரிந்த விசுவாசிகளுக்கு இந்த இதழை அறிமுகம் செய்யுங்கள். அவர்களது முகவரிகளையும் எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். தமிழ்மொழியல்லாது வேறு பல மொழிகளிலும் பல நாடுகளில் இந்த இதழை அச்சிட்டு வெளியிடுகிறோம். இந்த பத்திரிகை தொடர்ந்து வெளிவர ஆதரவு தாருங்கள். படங்கள் அனைத்தும் அனுமதியோடே அச்சிடப்பட்டுள்ளது. உங்கள் கருத்துக்களையும் நன்கொடைகளையும் அனுப்பவேண்டிய முகவரி :–*



**ஆயர். W.S.வேதா, காஸ்பெல் ட்ரூத், 2/227 கோலார்பட்டி, பொள்ளாச்சி வட்டம், தென் இந்தியா - 642 107**

# Editorial

# ஆசிரியரின் தலையங்கம்

நான் விழுந்தாலும் எழுந்திருப்பேன்; நான் இருளிலே உட்கார்ந்தால், கர்த்தர் எனக்கு வெளிச்சமாயிருப்பார் – மீகா 7 : 8

பிதாவாகிய தேவனுடைய அநாதி அன்பினிமித்தமாகவே இயேசு கிறிஸ்து இந்த உலகத்திற்கு வந்தார். மனுஷனாய் இந்த பூமிக்கு வந்து உலகத்தின் பாடுகள், துன்பங்களை சகித்து நமக்காக மத்தியஸ்தராகி நம்மேல் அன்பு காட்டினார். சரிந்து போன ஆவிக்குரிய தடுமாற்றத்தில் இருந்து நம்மை தூக்கி நிறுத்தி ,ஆத்துமாவைத் திடப்படுத்தி தைரியம் தரவே இயேசு இவ்வுலகிற்கு வந்தார்.இயேசு கிறிஸ்துவின் கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்ட நாம் உலகத்தின் போராட்டங்களையும், சோதனைகளையும் சந்தித்து தான் ஆக வேண்டும். எதிரியான சாத்தான் நம்முடைய நம்பிக்கையை அழித்துப் போட பல உபாய தந்திரங்களைச் செய்வான் . நாம் தேவனுடைய வாக்குத்தத்த வசனங்களை பற்றிக்கொண்டு சிலுவையண்டை நெருங்கி சேர்ந்தால் பிரகாசமான வாழ்வை தருவார்.
இந்த இதழின் தலைப்பு " சோதனை நேரங்களில் " நாங்கள் எந்த வகையிலும் எதிரியான பிசாசுக்கு செவி சாய்க்கவும், ஆச்சரியமான சமாதானத்தைத் தரும் தேவனுடைய தயையை குறை மதிப்பீடு செய்யவோ விரும்பவில்லை. ஒருவர் இரட்சிக்கப்பட்டாலும் இந்த உலகத்தில் போராட்டங்கள் உண்டு என்று வெளியரங்கமாகவே அறிக்கை செய்கிறோம். நமது பரலோக வீடாகிய நித்திய வீட்டிற்கு சென்று சேரும் வரையிலும் இந்த உலகத்தில் உபத்திரவம் உண்டு. தேவனை நமது பக்கத்தில் வைத்து, அவரோடு நடந்தால் அவர் சோதனையினின்று நம்மை காக்க வல்லவராயிருக்கிறார்.

நாங்கள் தேவனுடைய சுவிசேஷத்தை ஜெயமாக பிரசங்கித்து வருகிறோம். தேவ கிருபையால் வாழ்கிறோம். எப்படி இருப்பினும் பலரது வாழ்வு கசப்பான நம்பிக்கைகளிலும் உள் மற்றும் வெளிப்புற மன அழுத்தங்களும், பாரம் நிறைந்த வாழ்வையும் கடந்துதான் வந்திருக்கிறார்கள். போராட்டங்கள் இல்லை என்று ஒருவரும் சொல்ல முடியாது. தேவனுக்காய் வாழும் பயணத்தில் இரட்சிக்கப்பட்ட பலர் இந்த போராட்டம், மனக்குமுறல்களை தங்கள் ஆவிகளில் அடக்கிக் கொள்கிறார்கள்.

இந்த இதழில் எழுதப்பட போகிற காரியங்கள் முந்தின இதழ்களின் போதனையை போலல்லாமல் துயரப்படுகிற ஜனங்களை தேற்றி உற்சாகமூட்டும் ஆசீர்வாதங்களை கொடுக்கும் போதனையாக அமையும் என்று விசுவாசிக்கிறேன். நானும் கூட இரண்டு முறை வாழ்வில் இருள் நிறைந்த துன்பத்திற்குள் கடந்து செல்ல நேரிட்டது. ஆனாலும் நான் அமர்ந்திருந்து கர்த்தர் என் மேல் பாராட்டின அன்பையும், அரவணைப்பையும் ஒரு குணமாக்குதலையும் உணர்ந்து, தேவ பிரசன்னத்தை அதிகமாக ருசி பார்த்தேன். தேவன் தரும் உண்மையான அடைக்கலத்தில் என்றும் தரித்திருக்கவே விரும்புகிறேன்.
கடந்த பல தலைமுறைகள் பார்க்காத, சந்திக்காத சில அழுத்தங்களையும், போராட்டங்களையும் இந்த தலைமுறை சிறுவர்களும் , இளைஞர்களும், எல்லா பருவத்தினரும் சந்தித்துக் கொண்டிருக்கின்றனர் . எதிரியான பிசாசானவன் யாரென்று மனிதர்களையும் பார்க்காமல், தேவனுடைய பரிசுத்த ஜனங்களையும் பழிவாங்கும் நோக்கத்தோடு ஆயத்தப்படுகிறான்.

சாத்தானுடைய வல்லமையை காட்டிலும் தேவனுடைய வல்லமை பெரியது. தேவனுடைய வெளிச்சம் மாத்திரமே இருளை சிதறடிக்க முடியும். இரட்சிக்கப்பட்ட சில ஜனங்கள் கூட சில சமயங்களில் ஆவிக்குரிய போராட்டத்தை குறித்து சொல்ல தயங்குகிறார்கள்.கர்த்தரிடத்தில் இறுதியான பதில் உண்டு. இக்கட்டு காலத்தில் அவரே அவர்கள் அடைக்கலம். (சங்கீதம் 37 : 39) .யாரால் இருளின் ஆதிக்கத்தை உடைத்தெறிய முடியுமோ அவருடைய வல்லமையை உறுதியாய் பற்றிக் கொண்டு ஊக்கமாய் ஜெபிக்கும்போது காயம்பட்ட இருதயத்திற்கு ஆறுதல் உண்டாகும். நீங்கள் நேசிக்கப் பட்டவர்கள் தனிமைப்படுத்தப்பட்டவர்கள் அல்ல. தேவன் உங்கள் பெயரில் பற்றுதலாய் இருக்கிறார்.

**அவருடைய கோபம் ஒரு நிமிஷம், அவருடைய தயவோ நீடிய வாழ்வு; சாயங்காலத்தில் அழுகை தங்கும், விடியற்காலத்திலே களிப்புண்டாகும். சங்கீதம் 30 : 5**

ஆன்லைனில்

**அதிகமாக தெரிந்துகொள்ள**

*www.thegospeltruth.org*

**பதிவுசெய்து வெளியீட்டு காப்பகங்களுக்குள் உள்நுழைக**



# தேவனுடைய வாக்குத்தத்தங்கள்

தீங்குநாளில் அவர் என்னைத் தம்முடைய கூடாரத்தில் மறைத்து, என்னைத் தமது கூடார மறைவிலே ஒளித்துவைத்து, என்னைக் கன்மலையின்மேல் உயர்த்துவார். – சங்கீதம் 27 : 5

## தேவன் உங்களை நேசிக்கிறார்

பூர்வகாலமுதல் கர்த்தர் எனக்குத் தரிசனையானார் என்பாய்; ஆம் அநாதி சிநேகத்தால் உன்னைச் சிநேகித்தேன்; ஆதலால் காருணியத்தால் உன்னை இழுத்துக்கொள்ளுகிறேன்.
– எரேமியா 31 : 3

உமது நிமித்தம் எந்நேரமும் கொல்லப்படுகிறோம், அடிக்கப்படும் ஆடுகளைப்போல எண்ணப்படுகிறோம் என்று எழுதியிருக்கிறபடி நேரிட்டாலும்,கிறிஸ்துவின் அன்பைவிட்டு நம்மைப் பிரிப்பவன் யார்?



உபத்திரவமோ, வியாகுலமோ, துன்பமோ, பசியோ, நிர்வாணமோ, நாசமோசமோ, பட்டயமோ? இவையெல்லாவற்றிலேயும் நாம் நம்மில் அன்பு கூருகிறவராலே முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர் களாயிருக்கிறோமே.

மரணமானாலும், ஜீவனானாலும், தேவதூதர்களானாலும், அதிகாரங்களானாலும், வல்லமைகளானாலும், நிகழ்காரியங்களானாலும், வருங்காரியங்களானாலும், உயர்வானாலும், தாழ்வானாலும், வேறெந்தச் சிருஷ்டியானாலும் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பைவிட்டு நம்மைப் பிரிக்கமாட்டாதென்று நிச்சயித்திருக்கிறேன்.
ரோமர் 8 : 35-39

## இரக்கமுள்ள தேவன்

நாம் நிர்மூலமாகாதிருக்கிறது கர்த்தருடைய கிருபையே, அவருடைய இரக்கங்களுக்கு முடிவில்லை. அவைகள் காலைதோறும் புதியவைகள்; உமது உண்மை பெரிதாயிருக்கிறது.
– புலம்பல் 3 : 22-23

## ஜெபத்தை கேட்கும் தேவன்

இந்த ஏழை கூப்பிட்டான், கர்த்தர் கேட்டு, அவனை அவன் இடுக்கண்களுக்கெல்லாம் நீங்கலாக்கி இரட்சித்தார்.
–சங்கீதம் 34 : 6

## தேவன் நமக்கு அடைக்கலம்

சிறுமைப்பட்டவனுக்குக் கர்த்தர் அடைக்கலமானவர்; நெருக்கப்படுகிற காலங்களில் அவரே தஞ்சமானவர்.
– சங்கீதம் 9 : 9

## கைவிடாத தேவன்

நீங்கள் பலங்கொண்டு திடமனதாயிருங்கள், அவர்களுக்குப் பயப்படவும் திகைக்கவும் வேண்டாம்; உன் தேவனாகிய கர்த்தர்தாமே உன்னோடேகூட வருகிறார்; அவர் உன்னை விட்டு விலகுவதும் இல்லை; உன்னைக் கைவிடுவதும் இல்லை என்று சொன்னான். கர்த்தர்தாமே உனக்கு முன்பாகப் போகிறவர், அவர் உன்னோடே இருப்பார்; அவர் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவது மில்லை; நீ பயப்படவும் கலங்கவும் வேண்டாம் என்றான்.
– உபாகமம் 31 : 6,8

## சமாதானம் தரும் தேவன்

சமாதானத்தை உங்களுக்கு வைத்துப்போகிறேன், என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன்; உலகம் கொடுக்கிறபிரகாரம் நான் உங்களுக்குக் கொடுக்கிறதில்லை. உங்கள் இருதயம் கலங்காமலும் பயப்படாமலும் இருப்பதாக.
– யோவான் 14 : 27

## வழிநடத்தும் தேவன்

உன் சுயபுத்தியின்மேல் சாயாமல், உன் முழு இருதயத்தோடும் கர்த்தரில் நம்பிக்கையாயிருந்து, உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக்கொள்; அப்பொழுது அவர் உன் பாதைகளைச் செவ்வைப்படுத்துவார்.
நீதிமொழிகள் 3 : 5-6

## தேற்றும் தேவன்

நமது கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவாகிய தேவனும், இரக்கங்களின் பிதாவும், சகலவிதமான ஆறுதலின் தேவனுமாயிருக்கிறவருக்கு ஸ்தோத்திரம். தேவனால் எங்களுக்கு அருளப்படுகிற ஆறுதலினாலே, எந்த உபத்திரவத்திலாகிலும் அகப்படுகிறவர்களுக்கு நாங்கள் ஆறுதல் செய்யத் திராணியுள்ளவர்களாகும்படி, எங்களுக்கு வரும் சகல உபத்திரவங்களிலேயும் அவரே எங்களுக்கு ஆறுதல்செய்கிறவர்.
– 2 கொரிந்தியர் 1 : 3-4

## இளைப்பாறுதல் தரும் தேவன்

வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்.
– மத்தேயு 11 : 28

# சோதனையின் நேரங்களில்

## புதுபெலன் தரும் தேவன்

சோர்ந்துபோகிறவனுக்கு அவர் பெலன் கொடுத்து, சத்துவமில்லாதவனுக்குச் சத்துவத்தைப் பெருகப்பண்ணுகிறார்.இளைஞர் இளைப்படைந்து சோர்ந்துபோவார்கள், வாலிபரும் இடறிவிழுவார்கள். கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ புதுப் பெலன டைந்து, கழுகுகளைப்போலச் செட்டைகளை அடித்து எழும்புவார்கள்; அவர்கள் ஓடினாலும் இளைப்படை யார்கள், நடந்தாலும் சோர்ந்துபோகார்கள்.
- ஏசாயா 40 : 29-31

## நிறைவாக்கும் தேவன்

என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார்.
பிலிப்பியர் 4 : 19

## தப்புவிக்கும் தேவன்

மனுஷருக்கு நேரிடுகிற சோதனையேயல்லாமல் வேறே சோதனை உங்களுக்கு நேரிடவில்லை. தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார்; உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுகிறதற்கு அவர் இடங்கொடாமல், சோதனையைத் தாங்கத் தக்கதாக, சோதனையோடுகூட அதற்குத் தப்பிக்கொள்ளும்படியான போக்கையும் உண்டாக்குவார்.
1 கொரிந்தியர் 10 : 13

## நமக்கான தேவ திட்டங்கள்

நீங்கள் எதிர்பார்த்திருக்கும் முடிவை உங்களுக்குக் கொடுக்கும்படிக்கு நான் உங்கள்பேரில் நினைத்திருக்கிற நினைவுகளை அறிவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்; அவைகள் தீமைக்கல்ல, சமாதானத்துக்கேதுவான நினைவுகளே.
- எரேமியா 29 : 11

## நமக்காக யுத்தம் பண்ணும் தேவன்

அப்பொழுது மோசே ஜனங்களை நோக்கி: பயப்படாதிருங்கள்;



நீங்கள் நின்றுகொண்டு இன்றைக்குக் கர்த்தர் உங்களுக்குச் செய்யும் இரட்சிப்பைப் பாருங்கள்; இன்றைக்கு நீங்கள் காண்கிற எகிப்தியரை இனி என்றைக்கும் காணமாட்டீர்கள்.

கர்த்தர் உங்களுக்காக யுத்தம்பண்ணுவார்; நீங்கள் சும்மாயிருப்பீர்கள் என்றான்.
- யாத்திராகமம் 14 : 13-14

## உதவி செய்யும் தேவன்

அதினாலே நாம் தைரியங்கொண்டு: கர்த்தர் எனக்குச் சகாயர், நான் பயப்படேன், மனுஷன் எனக்கு என்னசெய்வான் என்று சொல்லலாமே.
- எபிரெயர் 13 : 6

## தேவனே நம் பெலன்

என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு.
- பிலிப்பியர் 4 : 13

# விசுவாசத்தின் பரீட்சை

இதிலே நீங்கள் மிகவும் சந்தோஷப்படுகிறீர்கள்; என்றாலும், துன்பப்படவேண்டியது அவசியமானதால், இப்பொழுது கொஞ்சக்காலம் பலவிதமான சோதனைகளினாலே துக்கப்படுகிறீர்கள். அழிந்து போகிற பொன் அக்கினியினாலே சோதிக்கப்படும்; அதைப் பார்க்கிலும் அதிக விலையேறப்பெற்றதாயிருக்கிற உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு, இயேசுகிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்குப் புகழ்ச்சியும் கனமும் மகிமையுமுண்டாகக் காணப்படும். 1 பேதுரு 1 : 6-7.நாம் தேவனோடு நெருங்கி ஐக்கியப்படும்போது சோதிக்கப்படலாம். ஆனாலும் கசப்பான சோதனையின் மத்தியிலும் ஆத்துமாவிலும் சந்தோசம் இருப்பதை புரிந்து கொள்வது அவசியம். தேவன் நம் பட்சத்தில் இருக்கிறார். அவர் நம்மை நேசிக்கிறார். அவரே நமக்கு உதவி செய்வார் என்கிற உணர்வு மாத்திரம் இருந்தால் போதும். உங்கள் துக்கம் சந்தோஷமாக மாறும். சில சமயங்களில் நம்முடைய பயம் மற்றும் சந்தேகம் சந்தோசத்தை தடைசெய்யும். இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரிடத்தில் அடைக்கலமாய் வந்த உனக்கு அவராலே நிறைவான பலன் உண்டாகும் என்று ஆவியிலே உணரும்போது கொந்தளிக்க செய்யும் உணர்வுகள் ஒன்றுமில்லாமல் போகும். கவனமாய் இருப்போம். மெல்லிய அவருடைய சத்தம் கேட்போம் . உபத்திரவத்தின் பொறுமையாய் இருங்கள். ஒரு நல்ல போர் சேவகனாய் தீங்கு அனுபவி. விசுவாசத்திலே பொறுமையாய் இருங்கள். நல்ல போராட்டத்தைப் போராடுங்கள். பிள்ளைகளோடு சேர்ந்து ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவோடு கூட நீங்கள் சந்தோஷப்பட்டு, மகிழ்ந்து களிகூரும் இசையை, வெற்றியின் பாடல்களை உங்கள் ஆத்துமா ஒரு நாள் பாடும். அந்த நாளை எதிர்பார்த்து காத்திருப்போம்.

## சந்தேகப்படுவதற்கு உங்கள் இதயத்தை பூட்டுங்கள்

நம்பிக்கை சிறகுகள் – டீஸ்லே



தேவனை குறித்தும், அவருடைய வார்த்தையை குறித்தும் சந்தேகிக்கும் பழக்கத்தை பிசாசுதான் கொண்டு வருவான். வெகு நாட்களாக இதை தூண்டி சந்தேகத்தை அதிகரித்து விடுவான். சந்தேகித்தல் என்பது வயல்வெளிகளின் நடுவே பலரது கால்தடங்கள் பதிக்கப்பட்டு ஒரு பாதையாக உருவாகி விடுவதைப் போல ஒரு பாதை உருவாக்கப்பட்டு விடுகிறது. கண்டிப்பான, கடுமையான தேவ வல்லமை வெளிப்படும் போது தான் சந்தேகிக்கும் வழிகளை அழித்துப்போட்டு உங்களை காக்க முடியும். மீண்டும் கூறுகிறேன், சந்தேகித்தல் என்பது சாத்தான் கொண்டு வருவதே. சந்தேகப்படுதலின் மோசமான நிலை என்னவென்றால் தேவன் நம் ஆத்துமாவுக்கு செய்ததைக்  குறித்து சந்தேகப்படுவதே. சந்தேகப்படுகிற பழக்கமுடைய ஜனங்கள் சிறிதளவே விசுவாசம் உள்ளவர்கள். உங்கள் நம்பிக் கையை கெடுக்கும் விதத்தில் சாத்தான் உருவாக்கும் பாதையை நீங்கள் முற்றிலும் தடை செய்யாவிட்டால், நீண்ட துயரத்திற்கு ஆளாவீர்கள். தங்களுடைய ஆவிக்குரிய அனுபவத்தையே சந்தேகப்பட்ட சில மனிதர்களை எனக்கு தெரியும். அதற்காக அவர்கள் தேவனிடத்தில் மன்னிப்பு கேட்டார்கள். சந்தேகிக்கும் ஆவியும் குற்றப்படுத்தும் ஆவியும் நெருங்கிய தொடர்புடையவை ஒன்றாகவே சில சமயங்களில் கிரியை செய்யும்.

சில ஜனங்களுக்கு சந்தேகப்படுதல் இரண்டாவது   சுபாவம். மேலும் விசுவாசிப்பதை விட சந்தேகிப்பது மிக எளிது. அந்த ஜனங்களுடைய சந்தேகிக்கும் ஆவியால் பிறரும் பாதிக்கப்படுவர். பிறரையும் சந்தேகப்பட தூண்டும் இவர்களின் வார்த்தைக்கு சிலர் கதவை அடைத்துக் கொள்கிறார்கள். தங்களுடைய ஆர்வமான வேண்டுகோள்களைத் தவிர மற்ற எல்லாவற்றையும் சந்தேகிக்கும் ஜனங்கள் வெகு சீக்கிரத்தில் விழுந்துபோகிறார்கள்.

சந்தேகம் என்பது பார்வையாளர்களைப் போன்றது. அவர்கள் பொழுதுபோக்காக தங்கி நிலைத்து விடுகிறார்கள். அதே சமயம் அவர்களுடைய வார்த்தையில் கவனம் செலுத்தாமல் விட்டுவிட்டால், கடிந்து கொள்ளப்பட்டவர்களாய் சீக்கிரத்தில் திரும்பி போய்விடும் பார்வையாளர்களைப் போன்று சந்தேகமும் திரும்பிப் போய்விடும்.சந்தேகித்து கொண்டேயிருக்கும் பழக்கம் உடையவர்கள் பிறருடைய கருத்துக்களை அறிந்து கொள்ளவும் விரும்புவார்கள்.



## சூரியப் பிரகாசத்தை சந்தித்தல்

பாடும் இதயத்தின்  ரகசியம் –  நெய்லர்



சூரிய வெளிச்சத்தை பார்ப்பது மிகவும் சந்தோஷம் இருட்டுல எழுந்து கிழக்கு நோக்கி நாம் சூரிய வெளிச்சத்தை எதிர்நோக்கி காத்திருப்போம்

பழைய நண்பர்களுக்கு பதிலாக புதிய நாளில் புது நண்பர்களை கற்றுத் தருவார் அளிக்கப்பட்ட நம்பிக்கை துளிர்க்கும் புதிய சந்தர்ப்பங்கள் உண்டாக்கப்படும் இருட்டை விரட்டி அடிக்கும் விடியற்காலை சூரிய வெளிச்சம் அது மகிமையாய் பிரகாசிக்கட்டும் விசுவாசிக்கிற கிறிஸ்தவர்களே மகிழ்ச்சி ஆனவர்கள் அவர்கள் ஏமாற்றம் அடைவதில்லை கடந்த நாட்களில் கிடைக்காத நற்காரியங்கள் அவர்களுடைய வாழ்வில் நடக்கும் இறந்து போனதை கர்த்தர் திரும்பத் தருவார் நாம் கொண்டுள்ள விசுவாசம் நாம் சந்திக்கும் பிரச்சனையாகும் நிச்சயமான  முடிவு உண்டு..

## துன்பத்தின் நடுவில் பாடுதல்



பாடும் இதயத்தின்  ரகசியம் –  நெய்லர்

வாழ்வில் பல இடுக்கண்கள்  நேரிடும் . இடுக்கண், துன்பம், வேதனை, ஏமாற்றங்கள் போன்ற எல்லாவற்றையும் தாண்டியே தேவன் நம்மை உருவாக்கி வனைந்திருக்கிறார். இவை யாவும் நம்மை மெருகேற்றி, சுத்தப்படுத்தி, சமமான, சமதளமாக்க பயன்படும் ஆயுதங்கள். நம்மை பிரகாசிக்கச் செய்ய உதவும் மெருகூட்டும் சக்கரங்கள். பிரச்சனைகளோடு துக்கப்பட்டுப் போராடிக் கொண்டிருக்கிற நமக்கு சிறிதளவு கூட வாழ்வில் சந்தோஷம் இல்லாதிருப்பது போல தோன்றும். எளிமை மற்றும் சகிப்புத்தன்மை மாத்திரம் சந்தோஷத்தைத் தராது. காயங்களும், தடைகளும், துன்பங்களும் வாழ்வில் இல்லாமல் இருக்காது. ஆகவே இவற்றை மேற்கொண்டு ஜெயிப்பதிலே நம்முடைய சந்தோஷம் நிறைவாய் இருக்கும்.

பிரச்சனை இல்லாத சமயத்தில் நீங்கள் பாடுகிற பாடல் அல்லாமல், வேறொரு பாடலை உங்களுடைய பிரச்சனை நேரங்களில் பாடலாம். தைரியத்தோடே விசுவாசித்தால் தேவனுடைய உதவினால் நம்பிக்கையின் பாடல்களை பாடும்போது தைரியம் உண்டாகும். பயங்களை புறம்பே தள்ளும். நாம் பயணிக்கும் உபத்திரவத்தின் முடிவிலே இருக்கும் ஜீவகிரீடத்தை சுதந்தரிக்கும் பொருட்டு நாம் எதிர்பார்த்திருக்கும் ஜெயத்தை பாடல்கள் மூலமாக பாடி தேவனை மகிமைப்படுத் தலாம்.தேவன் நம்மேல் பாராட்டின கிருபைகளை  நினைத்து மகிழ்ச்சியோடே துதிப்போம்.

## உங்கள் விசுவாசத்தை மேலாக எண்ணுங்கள்

பாடும் இதயத்தின் ரகசியம் – நெய்லர்



கிறிஸ்தவ அனுபவத்தில் நாம் நம்பிக்கை கொண்டிருக்க வேண்டும். மனம் தளர்ந்த மற்றும் சந்தேகிக்கும் ஜனங்களை தான் அதிகமாய் நான் பார்த்து இருக்கிறேன். நான் சிலரிடம் ஏன் சந்தேகப்படுகிறீர்கள் என்று கேட்டதற்கு அவர்களுடைய பதில் எங்களுக்குச் சரியாக தோன்றவில்லை என்கின்றனர். ஏன் அவ்வாறு கூறுகிறீர்கள் என்பதற்கு எங்களுக்கு தெரியாது. ஆனால் சரியென்று உணர முடியவில்லை என்கின்றனர்.

உங்களிலும் அநேகர் இப்படி சிந்தித்துக் கொண்டிருக்கி றீர்களா? நல்லது. அது என்ன? உங்கள் உணர்ச்சிகளை கொண்டு ஆவிக்குரிய தகுதியை சோதிக்கக் கூடாது. சிலர் சிறிய தவறு செய்திருப்பினும், மாம்சீகமாக அதன் விளைவை எண்ணி குற்ற மனப்பான்மையோடு காணப்படுவர்.இன்னும் சிலர் ஒரு மரணத்துக்கேதுவான வியாதியை சந்திக்கும்போது உணர்வடைவர்.ஆவியிலும் கூட.தேவனோடு நீங்கள் கொண்டுள்ள ஐக்கியம் என்ன? ஆவிக்குரிய நிலை நிற்றலில் உணர்வுகளைக் கொண்டு முடிவு எடுக்கக் கூடாது. விசுவாசத்தில் நிற்கவும், விசுவாசத்தைக் கற்றுக் கொள்ளவும் விசுவாசத்தில் வாழவும் பழகிக்கொள்ள வேண்டும். உங்களை நீங்களே சரி செய்து கொள்ளுங்கள்.உங்கள் உணர்வுகளைக் கொண்டு விசுவாசத்தை அளவிடாதீர்கள்.மாறாக உங்கள் விசுவாசமே உங்களை ஆளக்கடவது.பொதுவாக, நீங்கள் விசுவாசிப்பது சரி என்றால் நீங்கள் உணர்வதும் சரியே.எப்படி இருக்கிறீர்கள்? உணர்வுகளுக்கு முக்கியத்துவம் தருகிறீர்களா? அல்லது விசுவாசத்திற்கு முக்கியத்துவம் தருகிறீர்களா?

நம் வாழ்க்கையையே அனுதினமும் விசுவாசம் எனும் செங்கல்லால் கட்ட வேண்டும். மாறாக பயம், சந்தேகம்,ஏமாற்றம் துன்பம் இவைகளை கொண்டு வாழ்வை கட்ட முயற்சிக்கக் கூடாது. ஏராளமான விசுவாச மக்களை நான் கண்டதுண்டு. விசுவாச பயணத்தில் பாடும் இதயத்தின் இரகசியத்தை புரிந்து கொள்ளக்கூடும் – மகிழ்ச்சியான, சந்தோஷமான, கிறிஸ்தவ அனுபவம் எதிர்காலத்தைக் குறித்த நிச்சய தன்மை, நிகழ்காலத்தை குறித்த நிச்சயம் ஆகும் .

## தோல்விதான் மிகப்பெரும் வெற்றிக்கு அடையாளம்

பாடும் இதயத்தின் இரகசியம் – நெய்லர்



ஏதோ ஒன்றைத் திரும்பத் திரும்ப முயற்சித்தும் தோல்வியை சந்திக்கிறீர்களா? நல்லது . அப்போஸ்தலனாகிய பவுலும் கூட சோதனைகளின் வழியாகத்தான் கடந்து சென்றார்.

என் சரீரத்தை உயர்த்தாதபடிக்கு ஒரு முள் கொடுக்கப்பட்டிருக்கிறது என்கிறார் பவுல் அப்போஸ்தலர். பவுல் அதனோடு போராடிக் கொண்டிருந்தும் தேவன் அதை எடுத்துப் போடவில்லை. தேவன் சொல்கிறார். என் கிருபை உனக்குப் போதும்.தோல்விகளையே பார்க்கும் நமக்கு அது கோபத்தையே உண்டாக்கும். நம்பிக்கையும் , எதிர்பார்ப்பும் சில சமயங்களில் நிச்சயமற்றதாய் இருக்கும். நமக்கு முடிவு கிடைக்கவில்லை என்றாலும் தேவனோடு ஒப்புரவாக பழகிக்கொள்ளுங்கள். சில வேளைகளில் போராடி பிரச்சனை செய்ய முடியும் என்பதை மிகப்பெரிய தோல்வி என்று சூழ்நிலையைப் பார்த்து கூறினோமோ அதையே வெற்றி களிப்பாக்குவார் நம் தேவன். நீங்கள் விரும்புகிறபடி நடக்கவில்லையானால் உங்களுக்கு தேவன் என்ன கொடுத்திருக்கிறாரோ அதைக் குறித்து வெட்கப்படாதீர்கள். நீங்கள் செய்ய வேண்டியவற்றை தடைபடாது செய்யுங்கள்.
ஒரு புருஷனாகிலும் ஸ்திரீயாகிலும் உலகத்தைப் பார்த்து கூற வேண்டியது யாதெனில், எனக்கு தோல்விகள் நேர்ந்தது, ஆனால் நான் தோல்வி யுற்றவன் அல்ல. நான் தோற்றேன். ஆனால் மீண்டும் ஜெயமெடுப்பேன். பல காரியங்களை ஜனங்கள் சந்திக்க வேண்டியுள்ளது. வீட்டு பிரச்சனைகள், தொழில் நஷ்டங்கள், கடன்கள், மாம்சீக இயலாமைகள், கொரோனா போன்ற கொள்ளை நோய்கள் இன்னும் பல காரியங்கள்.பூர்வகால வேதாகம காரியங்களை திரும்பி பார்க்கும்போது எத்தனையோ பேருடைய வாழ்வில் அவர்கள் சந்தித்த போராட்டங்களையும் பின்பு அதை மேற்கொண்டு ஜெயம் எடுத்ததையும் காணலாம்.
உங்கள் வாழ்வில் எந்த காரியமானாலும், நீங்கள் உதவியற்று நிற்கையில், சோர்ந்துபோய், கையை முடக்கி உட்கார்ந்துகொண்டு முறுமுறுப்பதை நிறுத்துங்கள். ஒரு வழி உங்களை ஜெயமான முடிவுக்கு அழைத்துச் செல்லும். வெற்றி நமதே !



**தேவனையே நோக்கி என் ஆத்துமா அமர்ந்திருக்கிறது; அவரால் என் இரட்சிப்பு வரும். அவரே என் கன்மலையும், என் இரட்சிப்பும், என் உயர்ந்த அடைக்கலமுமானவர்; நான் அதிகமாய் அசைக்கப்படுவதில்லை.**

**சங்கீதம் 62 : 1-2**

**Printed Matter -Posted Under Rule 114 & 121 P&T Guide Indian Constitution Act 25th & 19(1) Section**

**TAMIL EDITION - FOR PRIVATE CIRCULATION ONLY**

உங்களுக்குத் தெரியுமா?

விசுவாசத்தின் தகப்பன்மார் என்று அழைக்கப்பட்ட நம் முற்பிதாக்கள் அநேக உபத்திரவம் மற்றும் பாடுகளின் வழியாகத்தான் பயணித்திருப்பார்கள். புதிய ஏற்பாட்டு நாட்களில் அப்போஸ்தலர்களும், அநேக எதிர்ப்பு களையும் யோவான் அப்போஸ்தலர் தவிர, இரத்த சாட்சியாய் மரித்தும், தங்களுடைய விசுவாசத்தை நிலை நிறுத்தினர். பரலோக தேவனுடைய சிங்காசனத்திற்கு முன்பாக நின்ற இவர்கள் மிகுந்த உபத்திரவத்திலிருந்து வந்தவர்கள் என்றார் (வெளி 7 : 14). துயரமும், பாடுகளும் கிறிஸ்தவ வாழ்வின் ஒரு பகுதியாகும்.

ஏற்ற சமயத்தில் ஒரு வார்த்தை

## உபத்திரவமானது மற்றவர்களுக்கு ஆறுதல் செய்யும் திராணியை பெருகப்பண்ணும்

இதயப் பேச்சு – நெய்லர்

நம்முடைய பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக. கிறிஸ்துவைப்பற்றிய சாட்சி உங்களுக்குள்ளே ஸ்திரப்படுத்தப் பட்டபடியே – 2 கொரி 1:3-4



உபத்திரவமானது மற்றவர்களுக்கு ஆறுதல் செய்யும் திராணியைப் பெருகப் பண்ணும் . கர்த்தர் என்னை அவருடைய ஊழியத்திற்கு அழைத்தபோது என் ஆவியில் சில துக்கங்களை கண்டேன். அதை வார்த்தைகளால் என்னால் விவரிக்க இயலவில்லை. பல நேரங்களில் நம்பிக்கை இழந்த சூழ்நிலையை எதிர் கொண்டிருக்கிறேன். இப்போது முன் நடந்ததை திரும்பிப்பார்த்தால் மனுஷனுடைய இருதயத்தைக் குறித்தும், இரக்கத்தை சிநேகிப்பதையும் நான் கற்றுக் கொள்ளவே பல உபத்திரவங்களின் வாயிலாக கடந்துவர செய்திருக்கிறார். என்னுடைய ஆரம்ப கால உபத்திரவம் பாடுகளின் போது அநேக பரம இரகசியங்களை நிறைவாக தெரிந்திருக்கிறேன்

உபத்திரவத்திலே பொறுமையாய் சகித்துக் கொண்டிருந்தால் சுத்த பொன்னாக ஜொலிக்கச் செய்வார் நம் தேவன். நீங்கள் உபத்திரவப்படவில்லையானால் மற்றவர்களுக்கு ஆறுதல் செய்யும் திராணி உங்களுக்கு உண்டாயிராது. தேவனுடைய வாக்குத்தத்தத்தை கவனியுங்கள். அவரோடு கூட பாடுபட்டால், அவரோடே அரசாட்சி செய்வோம்.

ஆபிரகாம் ஒரு உயரிய தியாகத்தை (தன் ஒரே பேறான குமாரன் ஈசாக்கை பலியிடுதல்) உபத்திரவத்திற்குள்ளாக ஒப்புக் கொடுக்க தயாரானார். அவருடைய விசுவாசம் சோதிக்கப்பட்டது.யோபு தன் உலகப்பிரகாரமான ஐசுவரியத்தை இழந்தது மாத்திரமல்ல, தன் மனைவி, பிள்ளைகள், தனக்கு உண்டான யாவற்றையும் இழந்து, கடைசியில் தன் சரீர சுகத்தையும் இழந்தார். ஆம் அதுதான் தேவன் தம்முடைய இரக்கத்தையும், அன்பையும் நம்மேல் காண்பிக்கும் தருணம். யோபு இந்த உபத்திரவத்திலே, இருளான நாட்களிலே, எத்தனை காரியங்களை அறிந்து பலப்பட்டிருப்பார். இந்த உலகம் அவரை வைத்து என்னவெல்லாம் கற்று இருக்கும். வேதத்தை ஆராய்ந்து பார்த்து சோதிக்கப்பட்ட மனுஷர்களையும், அவர்களுடைய நல் முடிவையும் கற்றுக் கொள்வது நமக்கு ஏற்ற துணையும், உற்சாகமூட்டும் வார்த்தைகளுமாம். பரிசுத்த வேதாகமம் வெறும் சந்தோஷம், சமாதானம், ஆறுதல், இவைகளை மாத்திரம் கூறிவிட்டு, கடின பாதையில் செல்ல வேண்டிய நிலையை கூறாதே விட்டிருந்தால் நம்முடைய நிலை என்னே பரிதாபம்! தேவன் நம்மை சிட்சிப்பாரானால் அது நமக்கு நலமான ஒன்றை வெளிப்படுத்தவே நம்மை புடமிட்டு சோதிப்பாரானால் நாம் சுத்த பொன்னாக விளங்குவோம். ஆகவே உபத்திரவத்திலே பொறுமையாக இருங்கள். கெத்சமனே தோட்டத்திலே இரா முழுவதும் வியாகுலப்படும் இயேசுவை நினையுங்கள்.உங்களுடைய முட்கிரீடத்தை அணிந்து கல்வாரி பாடுகளை தாங்கிக் கொள்ளுங்கள். அப்போதுதான் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவோடு ஆளுகை செய்ய பாத்திரராவோம்.

CONTACT :-

**The Editor,**
**Gospel Truth,**
**P.O. Box - 54**
**Pollachi Town**
**INDIA - 642 001.**

Email :
vedhacog1954@gmail.com

**கர்த்தருக்கு பரிசுத்தம்**

**THE CHURCH OF GOD** *Worship Place:*

**Church Street, Kolarpatti, Pollachi - 642 107**

**தேவசபை** ஆராதனை நடைபெறும் இடம் :

**சர்ச் தெரு, கோலார்பட்டி, பொள்ளாச்சி - 642 107**

SUNDAY SERVICE : 10 AM - **ஞாயிறு ஆராதனை : காலை 10 மணி**

எந்த சபைக்கும் போகாதவர்கள் எங்களுடன் பரிசுத்தஆராதனையில் கலந்துகொள்ள அழைக்கின்றோம்.

Come & Worship with Real Truth

**Tamil Editor : W.S.VEDHA, THE CHURCH OF GOD, 2/227 -KOLARPATTI, POLLACHI TALUK, SOUTH INDIA - 642 107. Phone : 04259 - 280488 Cell : 95975 62641.**

**Team : V.Selvam, V.Jayanathan Gnanarajan, J.Grace Johnsy, V.J.Sam kirubaharan**

**Printer : Joy Printers, Pollachi - 642 001. Cell : 96592 54316**